NORWEGIAN MINISTRY OF
JUSTICE AND PUBLIC SECURITY

Guide on how to avoid terrorist funding

# உங்களுடைய நன்கொடைகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம்







# உங்களுடைய நன்கொடைகள் தவறாகப் பயன்படுத்தப்படலாம்

## 1. தர்ம காரியங்களுக்காக நிதிதிரட்டுதல்

நார்வேயில் நிறுவனங்கள் மற்றும் சங்கங்கள் தர்மகாரியங்களுக்காக நிதி திரட்டுவது என்பது உயர்வானதும் பழமையானதுமான மரபு ஆகும்.

உலகம் முழுவதும் ஏற்படுகிற கடுமையான பேரழிவுகள் மற்றும் மனிதாபிமானத்திற்குரிய நெருக்கடிகள் தொடர்பாக நிதி திரப்பட்டப்படுகிறது. வருடாந்திர “TV–aksjonen” பிரசாரம் போன்று பல்வேறு தர்மத்திற்கான பிரசாரங்கள் தொடர்பாக பணம் பெருந்தொகையாக திரட்டப்படுகிறது.

அத்துடன், எத்தனையோ நிறுவனங்கள் மற்றும் சங்கங்களால் அமைக்கப்படும் திருவிழாக்களிலும் வெவ்வேறு தனியாருடைய ஏற்பாடுகளின் பேரிலும் வறியவர்களுக்கான தொடர்ந்த நிதி திரட்டல்கள் உள்ளன. இம்மாதிரியான நிதி திரட்டல்கள் தேவாலயச் சேவைகளிலோ அல்லது பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை பிராத்தனைகளிலோ செய்யப்படும் நிதி திரட்டல்கள் போன்று, வெவ்வேறு மதம் சார்ந்த சமுதாயங்களால் அமைக்கப்படும் நிலையான ஏற்பாடுகள் மூலமாக நடைபெறுகின்றன.

இவ்வாறு திரட்டப்பட்ட நிதிகள் வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் சமுதாயங்கள் தமது அறக்கட்டளைத் திட்டங்களுக்கு உதவுவதற்காக கிடைக்கக் கூடிய பெருமளவிலான தொகைகளைக் குறிக்கின்றன.



## 2. பயங்கரவாதத்திற்கு ஆதரவு

நன்கொடை ஒன்றை வழங்குவதற்கு முன்பாக, முழுமையாகச் சோதித்து விடுங்கள். உங்களுடைய பணம் எங்கே போகிறது என்பது பற்றியோ அல்லது அது எதற்காகப் பயன்படுத்தப்படும் என்றோ உங்களுக்கு சந்தேகம் இருந்தால், நன்கொடை செய்வதற்கு முன்பாகப் பொறுமைக் காத்திடுங்கள்.

நார்வேயில் திரட்டப்பட்டுள்ளத் தொகைகள் சமயங்களில் பயங்கரவாதத்திற்கு நிதி உதவி செய்யவோ அல்லது பயங்கரவாதத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதாக அறியப்படும் குழுக்களுக்கு நிதி உதவி செய்யவோ பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நம்புதற்கான காரணம் உள்ளது.

பயங்கரவாதத்திற்கும் பயங்கரவாதத்தில் ஈடுபடுவோருக்கும் உதவுவதையே ஒரே குறிக்கோளாகக் கொண்டுள்ள நிறுவனங்கள் அமைக்கப்பட்டு வருவதை சர்வதேச அனுபவம் காட்டுகிறது. இது சர்வதேச அளவிலும் தேசிய அளவிலும் நீண்ட காலமாக கவனம் குவிக்கப்பட்டுள்ள ஒரு விஷயமாகும்.

மற்ற நாடுகளைப் போன்றே, நார்வேயில் நாங்கள் பயங்கரவாத்திற்கு உதவும் அல்லது அதில் ஈடுபடுகிற நபர்கள் அல்லது நிறுவனங்களின், பேரில் நிதி மாற்றம் அல்லது பிற உதவிகளைத் தடுக்கும் படியாக விதிமுறைகள் மற்றும் சட்டங்களை அறிமுகம் செய்துள்ளோம்.

# பயங்கரவாதத்திற்கு நிதி உதவி செய்வது குற்றச்செயல் ஆகும்

## The Norwegian Penal Code § 147 b

பயங்கரவாதத்திற்கு நிதி உதவி செய்வதற்கான தடை நார்வேயின் பீனல் கோடு பிரிவு 147 b யின் கீழ் விதிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கை என்பதற்கான சட்டரீதியான இலக்கணம் நார்வேயின் பீனல் கோடு பிரிவு 147a –யில் காணப்படுகிறது.

பயங்கரவாதத்திற்கு நிதியளிப்பது அல்லது அத்தகைய குற்றச்செயலுக்கு உதவுவது மற்றும் உடந்தையாக இருப்பது என்பது 10 ஆண்டிற்கு மிகாத காலத்திற்கான சிறைத்தண்டனை மூலம் தண்டிக்கப்படுவது.

பின்வருபவைகள் குற்றச் செயல்களாகும்:

- பயங்கரவாதச் செயல்களை ஆதரிக்கிற அல்லது அவற்றில் ஈடுபடுகிற நபர்களுக்கோ, குழுக்களுக்கோ, நிறுவனங்களுக்கோ அல்லது முனைவகங்களுக்கோ தொகைகளை அல்லது மற்ற சொத்துக்களை மாற்றல் செய்வது

- பயங்கரவாதச் செயல்களை ஆதரிக்கிற அல்லது அவற்றில் ஈடுபடுகிற நபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் அல்லது முனைவகங்களின் பெயரில் நிதிகளை வசூலிப்பது

- பயங்கரவாதச் செயல்களை ஆதரிக்கிற அல்லது அவற்றில் ஈடுபடுகிற நபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் அல்லது முனைவகங்களுக்கு நிதிகள், பிற சொத்துக்கள், வங்கிச் சேவைகள் அல்லது மற்ற நிதிசார்ந்த சேவைகள் கிடைக்குமாறு செய்வது

- பயங்கரவாதக் குழுவின் ஸ்தாபனம் அல்லது இயக்கத்தின் ஒரு பகுதியாக மறைமுகமாக இருக்கக் கூடிய செயல்திட்டங்களுக்கு உதவுவது.

## 3. முறையற்றப் பணமாற்றல் அமைப்புகள்

ஒவ்வொரு ஆண்டும் நார்வேயிலிருந்து வெளிநாட்டிற்கு ஹவாலா வங்கிகள் என்று பெரும்பாலும் குறிப்பிடப்படுகிற முறையற்றப் பணமாற்றல் அமைப்புகள் வாயிலாக பல நூறு மில்லியன் நார்வே க்ரோனர்கள் மாற்றம் செய்யப்படுகின்றன. இந்த நிதிகளில் பெரும்பாலானவை குடும்ப உறுப்பினர்களுக்கு உதவவும், மற்ற நல்ல காரியங்களுக்காகவும் உலகின் ஏனைய பகுதிகளில் மாற்றல் செய்யப்படுகின்றன.

ஹவாலா வங்கிகள் பயங்கரவாதத்துடன் தொடர்பான பிரத்யேக அபாயத்தைக் குறிக்கின்றன. பெரும்பாலும் இம்மாதிரி முறைப்படி அல்லாத பணமாற்றல் அமைப்புகளுக்கு பொறுப்பான நபர்களுக்கு பணத்தை யார் பெற்றுக் கொள்கிறார்கள் மற்றும் அவை எதற்கு பயன்படுத்தப்படப் போகின்றன என்பது பற்றிய தேவையான மீள்பார்வையோ அல்லது அறிவோ இருக்காது. அத்துடன், தனிப்பட்டப் பரிவர்த்தனைகளின் (செலவுகள்/கட்டணங்கள்) பகுதிகள் பயங்கரவாதக் குழுக்களுக்கு உதவுகிற அபாயம் கூட இருக்கக் கூடும்.

## 4. பயங்கரவாதச் செலவுகள்

பெரும்பாலும் பயங்கரவாத நடவடிக்கை செயல்படுத்தப்படுவதன் பின்னே நீண்ட கால திட்டமிடல் மற்றும் இது தொடர்பான செலவுகள் இருக்கின்றன. பயங்கரவாதக் குழுவின் நிதியமைப்புகள் எந்த அளவிற்கு வலுவாக உள்ளதோ அந்த அளவிற்கு பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுவதற்கான அக்குழுவின் திறன் பெரிதாக உள்ளது. அவர்களுக்கான நிதிநல்கை உருக்கொள்ளத் தவறினால் அச்சுறுத்தல் குறைந்து போகிறது.

## 5. உங்கள் பணத்தை முறைப்படிப் பயன்படுத்துங்கள்

நீங்களோ அல்லது உங்களுடைய நிறுவனமோ பயங்கரவாதத்துடன் தொடர்புள்ள நபர்கள் அல்லது அதன் காரியங்களுக்காக நிதி திரட்டுவதை தடுப்பதற்காக ஏதாவது செய்யலாம்.

- மதிப்பீடுகளைச் செய்தல் மற்றும் இயல்பறிவைப் பயன்படுத்தவும்.
- நீங்கள் பணத்தை நன்கொடையாக அளிக்கிற நிறுவனம், அதன் கூட்டாளிகள் மற்றும் நிர்வாகத்தினரின் நோக்கத்தை சரிபார்த்தல். அவர்களின் மதிப்பை பரிச்சயப்படுத்திக் கொள்ளவும்.
- நிதிதிரட்டுவோரிடம் கட்டுப்பாட்டிற்கான வினாக்களைக் கேளுங்கள் மேலும் அவர்களுடைய காரிய மனப்பான்மையை நிச்சயித்துக்கொள்ள சுட்டுக்குறிப்புகளை பெற்றுக் கொள்ளுங்கள். இணையத்தில் உள்ள தளங்கள், தனிச்சட்ட உருக்காக மத்திய ஒருங்கிணைப்பு பதிவேட்டில் செய்யப்பட்ட பதிவு, முன்பு நடந்து முடிந்த செயல்திட்டத்திற்கான கணக்குகள் மற்றும் முடிவுகள் ஆகியவற்றை இது உள்ளடக்குகிறது.



- தனிப்பட்ட நிதிகளை குடும்ப உறுப்பினர்கள் அல்லது வெளிநாட்டில் உள்ள பிறருக்கு பணமாற்றல் செய்வதன் பொருட்டு வெளிநாட்டிற்கு பணமாற்றல் செய்வதற்கான உரிமம் உள்ள நிறுவனங்களைப் பயன்படுத்தவும். நார்வேயின் நிதிசார்ந்த மேற்பார்வையிடும் அதிகாரியின் இணையதளமாகிய www.finanstilsynet.no யில் உள்ள உரிமப் பதிவேட்டைக் காண்பதன் வாயிலாக உரிமங்களை சரிபார்க்கலாம்.
- பணம் வசூலிக்கிற நிறுவனம் நிதிதிரட்டும் பதிவேட்டில் பதிவாகி உள்ளதா என்பதை சரிபார்க்கவும். நிதிதிரட்டும் பதிவேடு பெரும்பாலானவர்களுக்கு அவர்கள் நன்கொடை அளிக்கிற பணம் சொல்லப்பட்டுள்ள நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படும் என்று உறுதியளித்தல் வேண்டும். பதிவேட்டில் பதிந்து கொள்வது தன்விருப்பானது. பதிவேட்டைப் பற்றிய மேலும் விவரங்களை www.innsamlingskontrollen.no யில் காணலாம்.
- நிதிதிரட்டும் நிறுவனத்தை Brønnøysund பதிவேட்டு மையத்துடன் www.brreg.no, யில் சரிபார்க்கவும் மேலும் பொருந்துமேயானால், நிறுவன அதிகாரி www.stiftelsestilsynet.no யிடம் உள்ள நிறுவனப் பதிவேட்டையும் சரிபார்க்கவும். நீங்கள் நிறுவனப் பதிவேட்டில் நிறுவனம் பதிவாகி உள்ளதா என்பதை எளிதாக சரிபார்த்துக் கொள்ளலாம் மேலும் நிறுவனத்தின் நோக்கத்துடன் நேரடியான அணுக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன், பதிவாக்கம் செய்யப்பட்ட அனைத்து நிர்வாகக்குழு உறுப்பினர்கள் மற்றும் கணக்குத் தணிக்கையாளரின் பட்டியலையும் நீங்கள் காணலாம்.
- உங்கள் நன்கொடையால் உதவப்படுகிற நிறுவனம் அல்லது நபர் ருே பயங்கரவாதப் பட்டியலில் உள்ளதா/ உள்ளனரா என்பதை சோதித்துப் பார்க்கவும். இப்பட்டியலைUN-ன் இணையதளம் www.un.org/sc/committees/1267/aq_sanctions_list.shtml இல் காணலாம்.
- நன்கொடை ஒன்றை வழங்குவதற்கு முன்பாக முழுமையாக சோதித்து விடுங்கள். உங்களுடைய பணம் எங்கே போகிறது என்பது பற்றியோ அல்லது அது எதற்காகப் பயன்படுத்தப்படும் என்றோ உங்களுக்கு சந்தேகம் இருந்தால், நன்கொடை செய்வதற்கு முன்பாகக் காத்திருங்கள்.

Published by:
Ministry of Justice and Public Security

This publication is available in PDF format here:
www.radikalisering.no and www.goverment.no/jd

Publication number: G-0428 (Thamilsk)

Design/illustration: 07 Gruppen

